**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 323/2017 |
| Deposition of witness | PW- 5 /LW- 6 |
| Name | திரு. அரவிந்த் (மருத்துவர்) |
| Father's Name | திரு. தேவராஜன் |
| Village | தஞ்சாவூர் |
| Taluk | தஞ்சாவூர் |
| Age | 45/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of August 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி Bench Clerk Grade III என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.வீரப்பிரகாஷ் 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மூளை நரம்பியல் பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.12.2016 அன்று பட்டுக்கோட்டை GH ல் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது மாலை 05.15 மணியளவில் கீழக்குறிச்சி -யை சேர்ந்த பிரவீன் குமார் த/பெ ஆறுமுகம் 29 வயது என்பவரை சரவணன் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை தெரிந்த நபர் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் வலது பக்க முதுகில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதித்தேன். ஒரு நாள் சிகிச்சைக்கு பின் 27.12.2016 அன்று சிகிச்சையிலிருந்து விடுவித்தேன். அவருக்கு சாதாரண காயம் என்று விபத்து பதிவுடன் கூடிய காயச்சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த விபத்து பதிவுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை